**தேதி :** பிப்ரவரி 14, 2014

**<u>ஆந்திர பிரதேசத்தில் சமரச நடவடிக்கை தேவை</u>**

**-அருண் ஜேட்லி**

மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் பதவி காலம் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறது, "எனக்குப் பிறகு இங்கு எதுவுமே இருக்காது" என்பதுதான் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தனக்குப் பின்னே விட்டுச் செல்ல விரும்புகிறது. இக் கட்சி பதவியேற்ற ஆட்சியில் ஆரம்ப நாட்களில் அமைப்புகளின் சரிவு, ஆமை வேகத்தில் நடைபெற்ற பொருளாதார வளர்ச்சி, ஊழல் மலிந்து காணப்பட்டதால் அரசின் முடிவெடுத்தலில் நம்பகத்தன்மை குறைந்த நிலை ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டது.

தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பது தொடர்பாக சர்ச்சைக்குரிய தீர்மானத்தால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தற்போது முற்றிலுமாக சீர்குலைந்துவிட்டது. தனது சொந்த கட்சியிலிருந்தே பெரும் சக்திகளை முதலில் கட்டவிழ்த்து விட்டு இப்போது கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறது. எந்த தொந்தரவுகளும் இல்லாமல் நாடாளுமன்ற அமர்வை நடத்துவது என்பது மிகவும் அரிதான விஷயமாக மாறிவிட்டது. அரசு, குறிப்பாக பிரதம மந்திரி அலுவலகம் மற்றும் உள் துறை அமைச்சகம் இரண்டுமே தற்போது நடைபெற்று வரும் பிரச்சினைகளைத் தீர்க்க எந்த முனைப்பும் மேற்கொள்ளாமல் செயலற்று நிற்கின்றன.

இப்போதும்கூட காலம் கடந்து போய்விடவில்லை. பிரச்சினைகளை கையில் எடுத்து அலசி ஆராய்ந்து ஒரு நல்லிணக்கத் தீர்வை கொண்டு வர முடியும். சீமாந்தரா பகுதிக்கான தலைநகரம், அந்தப் பகுதியில் எதிர்காலத்தில் உயர் நீதி மன்றம் உருவாக்குவதற்கான முனைப்புகள், தனி மாநிலம் பிரிக்கப்பட்டதால் அந்தப் பகுதிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்புக்கான ஈட்டுத் தொகை வழங்குதல், இந்தப் பகுதிகளில் தண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகள் ஏற்படுத்தித் தருவது போன்ற தீர்க்கப்பட முடிகிற பிற பிரச்சினைகளுக்குத் தீர்வு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஜார்க்கண்ட், உத்தர்கான்ட் மற்றும் சத்தீஷ்கட் ஆகிய மூன்று தனி மாநிலங்கள் உருவாக்கிய விஷயத்தில் அப்போது எழுந்த பிரச்சினைகளை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு சுமூகமாகத் தீர்த்து வைத்தது.
இந்த வியாழக்கிழமை அன்று நடைபெற்ற நாடாளுமன்ற முடக்கமும் அங்கு நடந்தேறிய அருவருப்பூட்டும் காட்சிகள் அரங்கேறியதற்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுதான் காரணம். நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்கிய உறுப்பினர்களில் பெரும்பாலோர் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் உறுப்பினர்கள்தாம். தெலுங்கானா மற்றும் சீமாந்தரா பிரதேச பிரதிநிதிகளுக்கிடையே எழுந்த சர்ச்சைகளைத் தீர்த்து வைக்க ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. நல்லிணக்கத்தைக் கொண்டு வர எந்த அமைப்பையும் நியமிக்கவில்லை. நாடாளுமன்றத்தில் இந்த இரண்டு பிராந்தியங்களின் விருப்பங்களைப் பற்றி விவாதம் நடத்தும் சூழ்நிலை ஏற்படவில்லை. இந்த அமளி துமளியில் இந்திய ஜனநாயகத்திற்கு தொடர்ந்து அவப் பெயர் ஏற்பட்டு வருகிறது. நாடாளுமன்றத்தில் நிகழ்ந்து வரும் சம்பவங்களால், அரசியல்வாதிகள் மோசமானவர்கள் என்கிற இமேஜ் மக்களிடையே தொடர்ந்து மேலும் வலுவடைந்து வருகிறது. தெலுங்கானா மற்றும் சீமாந்தரா ஆகிய இரண்டு பகுதி மக்களுக்குமே தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட

உணர்வு இருந்து வருகிறது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அனைத்து விதமான நிர்வாகம் தொடர்பான தனது கடமையை கைகழுவி விட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் உள்ளேயோ அல்லது வெளியிலோ, சீமாந்தரா பகுதி மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி, தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்குவதில் ஒரு சமரச உடன்பாடு ஏற்படுவதற்கு வழிவகுக்கும் ஒரு குழு அமைப்பதற்கு இப்போதும் காலம் கடந்து விடவில்லை.

**********